**Crl. Misc.39**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC 18 /2022**

**Deposition of Witness : PW1**

| Name | அறிவுமலர் | Taluk | |
|---|---|---|---|
| Husband Name | சத்தீஸ் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 21.08.2024.** | | | |

**குறுக்கு விசாரணை**

1) 1 ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பே நெருங்கிய உறவினர் என்று சொன்னால் சரிதான். அவர் எனது அத்தை மகன் ஆவார். எனக்கும், 1 ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்ற மதுரையில் உள்ள தாய்மூகாம்பிகை திருமண மண்டபம் என்பது எனது தகப்பானருக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். எனது தகப்பானருக்கு என்னையும் சேர்த்து 3 மகள்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரரை பற்றி அனைத்து விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். சமூக நல அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும் . அதில் உள்ள விவரங்கள் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ முதலாமாண்டு வரை படித்துள்ளேன். நான் சமூக நல அலுவலர் நடத்திய விசாரணையில் நேரடியாக கலந்து கொண்டேன் என்று சொன்னால் சரிதான்.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு),
கரூர்.

2) எதிர்மனுதாரர் மதுரையில் உள்ள அரசு மருத்துவ கல்லூரியில் எதிர்மனுதாரர் எம்எஸ் ஆர்தோ படித்தபோது கே.கே நகரில் குடியிருப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் எதிர்மனுதாரர்தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி படிப்பு படித்து கொண்டிருக்கும்போதே வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு Stiphend கொடுக்கப்பட்டது. எங்களது திருமணம் முடிந்து 2 ஆண்டுகளுக்கு பின்னிட்டுதான் என் பெற்றோர் வீட்டு உபயோக பொருள்கள் வாங்கி கொடுத்தார் என்றால் தனிக்குடித்தனம் சென்றபோது வாங்கி கொடுத்தார் , அதற்கு முன்பு உறவினர் வீட்டில் தங்கியிருந்தபோது என் தகப்பனார்தான் செலவுக்கு பணம் கொடுத்தார்.

3) எதிர்மனுதாரர் மருத்துவராக பணிபுரிந்தபோதே வருமானம் பெற்று வந்தார் என்றும், அதனால் என் தகப்பனாரிடம் பணம் பெற்று செலவு செய்து வந்தார்என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் தகப்பனார் மற்றும் தாயார் அரசு பள்ளிஆசிரியர்கள் ஆவார்கள். எதிர்மனுதாரரின் ஒரே தம்பி பல் மருத்துவராக உள்ளார். எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் அரசு பள்ளி ஆசிரியர்கள் என்பதால் அவர்கள்தான் எதிர்மனுதாரரையும், என்னையும் பராமரித்து வந்தார்கள் என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு என் தகப்பனார் எந்த ஒரு உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4) சரவணன் மூத்தசகோதரியின் கணவர் ஆவார். என் தகப்பனார் சொத்துகளை சரவணனின் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்று சொல்லி எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்கள் என்னிடம் சொத்துக்களுக்காக

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு), கரூர்.

பிரச்சனை செய்தார்கள் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரின் தொழில் என்னவென்றால் ரியல் எஸ்டேட் செய்தார்.தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. பதிவு செய்த ரியல் எஸ்டேட் முகவராக என்றால் எனக்கு தெரியாது. ரியல் எஸ்டேட் என்பது தொடர்ந்து நிரந்தரமாக வருமானம் கிடைக்ககூடிய தொழில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

5) என் கணவர் லண்டன் சென்றபோது என் தகப்பனார் ரூ. 5 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளபோது அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை, ரொக்கமாக கொடுத்தார். நான் சொல்வது பொய் என்றும், என் தகப்பனார் ரூ. 5 லட்சம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிளைட் டிக்கெட் செலவுக்கு மட்டும்தான் என் தகப்பனார் பணம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. லண்டன் செல்வதற்கான அனைத்து செலவுகளையும், பிளைட் டிக்கெட்டுகளையும் என் தகப்பனார்தான் செய்தார். எதிர்மனுதாரர் மேல்படிப்பு முடித்துவிட்டு கருரில் அபிஷேக் மருத்துவமனை பாவா மெடிக்கல்லிற்கு பின்புறம் உள்ள இடத்தில் மருத்துவமனை நடத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான்.

6) அதே கால கட்டத்தில் எதிர்மனுதாரர் S& V LOGA மருத்துவமனையில் Consultant ஆக பணிபுரிந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அதன் பின்னிட்டு கரூர் கேபி மருத்துவமனையில் ஒரு பகுதியில் மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான். அதன் பின்னிட்டு கரூர் செங்குந்தபுரத்தில் வாடகை கட்டிடத்தில் மருத்துவமனை நடத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான். வாடகை கட்டிடத்திற்கு என்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு), கரூர்.

தகப்பனார்தான் ரூ. 2 லட்சம் கொடுத்தார். அதனால் தான் என்னை ஏற்றுகொண்டதாக எதிர்மனுதாரர் என்னிடம் சொன்னார். லண்டனில் இருந்து வந்ததற்கு பின்னிட்டு செங்குந்தபுரத்தில் வாடகை கட்டிடத்தில் மருத்துவமனை நடத்தும்வரை எத்தனை ஆண்டுகள் கரூரில் மருத்துவராக பணிபுரிந்தார்எ ன்றால் எனக்கு ஞாபகமில்லை, 3 ஆண்டுகள் பணிபுரிந்தார் என்றால் ஞாபகமில்லை.

7) செங்குந்தபுரத்தில் மருத்துவமனையில் நான் மெடிக்கல் Section ல் நான் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி 2 லட்சம் கொடுத்ததால் தான் என்னை அவ்வாறு அமர்த்தியதாக சொன்னார். 2007 ம் ஆண்டு நான் மனுவில் குறிப்பிட்டுள்ள விஷால் நெஸ்ட் அப்பார்ட்மெண்ட் வீட்டை எதிர்மனுதாரர் வாங்கினார் என்றால் சரிதான். அந்த அப்பார்ட்மெண்டை கரூர் சின்டிகேட் வங்கியில் ரூ. 18,75,000/- கடன் பெற்றுதான் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கான முன்பணத்தை என் தகப்பனார்தான் கொடுத்தார். மொத்தமாக அப்பார்ட்மெண்டிற்காக ரூ. 6 லட்சம் என் தகப்பனார் கொடுத்தார். ரூ. 2 லட்சம் கொடுத்ததால் தான் எதிர்மனுதாரர் என்னை மெடிக்கல் செக்சனில் அனுமதித்தாக சொல்வதாக பொய் என்று சொன்னால் சரியல்ல. வீடு வாங்குவதற்காக என் தகப்பனார் ரூ. 6 லட்சம் கொடுத்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த வீட்டிற்காக வங்கியில் வாங்கிய கடன் நாளது தேதி வரை நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

8) 2020 ஆம் ஆண்டு கொரனா காலம் என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் தமிழ்நாடு அரசின் பெருந்தொற்றுக்கான சிறப்பு சிகிச்சை

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு), கரூர்.

அளிப்பதற்கான அனுமதியை எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மருத்துவமனை கட்டுவதற்காக ரூ. 1 கோடி 55 லட்சம் கடன் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கடனுக்கு விஷால் நெஸ்ட் அப்பார்ட்மெண்ட் வீடு collateral security ஆக கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிர்மனுதாரர் கடன் வாங்கிய விவரம் தெரியும் என்றும், விஷால் நெஸ்ட் அப்பார்ட் மெண்ட் collateral security ஆக கொடுக்கப்பட்ட விவரம் தெரியும் என்றும், அதை ஒப்புகொண்டால் நான் கேட்டுள்ள பரிகாரத்திற்கு பாதகமாக ஆகும் என்பதால் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9) கொரனா காலகட்டத்தில் பல்வேறு சிறப்பு மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வந்து நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கினார்கள் என்றால் சரிதான். அப்போது நோயாளிகளின் ஆக்சிஜன் லெவலை பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். நோயாளிகளின் ஆக்சிஜன் லெவலை பராமரிக்கவேண்டும் என்பதால்தான் எதிர்மனுதாரர் அபிஷேக் மருத்துவமனையில் தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே சென்றுவிட்டார். மருத்துவ சேவைக்காகத்தான் எதிர்மனுதாரர் மருத்துவமனையில் தங்கியிருந்தார் என்றும், முறையாக sanitise செய்து வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கட்டாயப்படுத்தியதால்தான் வந்தார்.

10) சொந்தமாக வீடு மற்றும் மருத்துவமனை நடத்தி வரும் எதிர்மனுதாரர் வீட்டின் செலவிற்கு பணம் கொடுக்கவில்லை என்று சொல்வது

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு), கரூர்.

அவர் மீது பொய்யாக பழி சுமத்தவேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2020ம் ஆண்டிலிருந்து கொடுக்கவில்லை. தொலைபேசி மூலமாக எனது உறவினர் மற்றும் நண்பர்களிடம் நான் பேசினால் எதிர்மனுதாரர் பிரச்சனை செய்வதாக சொல்லியுள்ளபோதும் அவர்களது பெயரை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அருகில் குடியிருந்தவர்களிடம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு பிரச்சனை செய்தார். எந்த தேதியில் அவ்வாறு பிரச்சனை செய்தார் என்று மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

11) கனிமொழியின் கணவர் சரவணன் MD RADIO THERAPY படித்துள்ளார் என்றால் சரிதான். சரவணன் MS ORTHO படிக்கவேண்டும் என்பதற்காக எதிர்மனுதாரரிடம் MS ORTHO படிக்கவேண்டாம் என்று கட்டாயப்படுத்தினார் என்றால் சரியல்ல, வீட்டில் ஏற்கனவே ஒருவர் MS ORTHO இருப்பதால் இருதயம் சம்பந்தமாக படிக்கவேண்டும் என்றுதான் சொன்னார், கட்டாயப்படுத்தவில்லை. என் கணவர் இயற்கையாகவே MS ORTHO படிக்கவேண்டும் என்று விருப்பம் இருந்ததால்தான் என் தகப்பனார் சொல்லியும் அவர் எம்எஸ் ஆர்த்தோ படித்தார் என்றால் அவருக்கு எம்எஸ் ஆர்த்தோ படிக்கவேண்டும் என்று ஆசைதான், ஆனால் என் தகப்பனாருக்கும், எம்எஸ் ஆர்தோவிற்கும் எந்த சம்பந்தமில்லை. என் தகப்பனாரின் வார்த்தையை மீறி எதிர்மனுதாரர் எம் எஸ் ஆர்த்தோ படித்ததால் வாழ்க்கையில் நீ எவ்வாறு முன்னேறுவாய் என்று என் தகப்பனார் எதிர்மனுதாரருக்கு சவால் விட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என் தகப்பனாருக்கு தங்கை மகன் என்பதால் அவ்வாறு

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு), கரூர்.

சொல்லவேண்டிய அவசியமில்லை. எங்கள் குடும்பம் வசதி வாய்ப்புள்ள குடும்பம் என்றால் சரிதான்.

12) என் தகப்பனார் திருமணமான காலத்தில் இருந்தே எங்கள் குடும்ப வாழ்க்கையில் தலையீடு செய்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. திருமணமாகி 12 வருடங்கள் கழித்துதான் எங்களுடைய பிரச்சனை அவருக்கு தெரிந்தது. என் தகப்பனாரில் ஆதரவு ஆரம்ப முதலே இருந்ததால் தான் நானும் எதிர்மனுதாரரை வார்த்தையாலும், செயலாலும் அவமானப்படுத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு இருந்ததிருந்தால் லண்டன் செல்வதற்கு ஏன் பணம் கொடுத்திருக்கவேண்டும். நான்தான் எதிர்மனுதாரரிடம் வரதட்சணை வழக்கு தாக்கல் செய்வேன் என்று மிரட்டினேன் என்றும், எதிர்மனுதாரர் பெயரை எழுதி வைத்து தற்கொலை செய்வேன் என்று மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

13) மாப்பிள்ளை லண்டன் செல்கிறார் என்றும், அதற்காக என் தகப்பனார் என்ன செய்தார்என்று உறவினர்கள் மத்தியில் தனது சுயவிளம்பரத்திற்காக மட்டும்தான் பிளைட் டிக்கெட் எடுத்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் இருவருக்கும் அபிஷேக் மட்டும்தான் குழந்தை , அவர் தற்போது மங்களூரில் எம் எஸ் ஆர்த்தோ படித்து வருகிறார். எதிர்மனுதாரர் ஆசிரியர் குடும்பத்தில் இருந்து வந்ததாலும், எதிர்மனுதாரரின் குடும்பத்தை பற்றி தவறாக யாரும் பேசிவிடகூடாது என்பதற்காகவும், ஒரே மகனின் வாழ்ககை நலனுக்காகவும், நானும் எனது தகப்பானரும் எதிர்மனுதாரைரை அவமானபடுத்தி வந்தபோதுகூட அதை பொறுத்துகொண்டு எங்களுடன் வாழ்ந்து வந்தார் என்று சொன்னால்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு), கரூர்.

சரியல்ல.

14) எனது மகனை என் வசம் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக எதிர்மனுதாரரை பற்றி தவறாக சொல்லி வளர்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் மகன் வளர்ந்ததற்கு பின்னிட்டு எதிர்மனுதாரரை பற்றி தெரிந்து கொண்டுதான் என்னிடம் வந்தார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்(பொறுப்பு),

கரூர்.